**செ. கு. எண்**: 224 **நாள்**:20.06.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 20.6.2012

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கீழக்கூடலூர் (கிழக்கு) உட்கடை குள்ளப்பகவுண்டன்பட்டி, தாமரைசுனை என்ற காட்டுப் பகுதியின் அருகில் உள்ள பயிர் நிலங்களில் 17.6.2012 அன்று காவல் பணியில் ஈடுபட்டிருந்த குள்ளப்பகவுண்டன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணசாமி என்பவரின் மகன் சுருளிமுத்து என்கிற சடையாண்டி காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த சுருளிமுத்து என்கிற சடையாண்டியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான சுருளிமுத்து என்கிற சடையாண்டியின் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**